திருச்சி

சமயபுரம் போஜீசுவரர் கோயிலில் தேய்பிறை அஷ்டமி வழிபாடு

மண்ணச்சநல்லூர், ஆக 8: திருச்சி மாவட்டம், மண்ணச்சநல்லூர் வட்டம், சமயபுரம் ஆனந்த வள்ளி உடனுறை போஜீசுவரர் திருக்கோயிலில் செவ்வாய்க்கிழமை தேய்பிறை அஷ்டமி வழிபாடு நடைபெற்றது. இதையொட்டி காலபைரவருக்கு திரவியம், மஞ்சள், சந்தனம், பால், பன்னீர், திருநீர், பழ வகைகள் உள்ளிட்ட பொருள்களால் அபிஷேகம் செய்யப்பட்டு, தீபாராதனை நடைபெற்றது.

இதே போல திருப்பைஞ்ஞீலி ஞீலிவனேஸ்வரர் கோயில், மண்ணச்சநல்லூர் பூமிநாத சுவாமி கோயில், திருப்பட்டூர் பிரம்மபுரீஸ்வரர் கோயில் உள்ளிட்ட கோயில்களில் தேய்பிறை அஷ்டமி வழிபாடு நடைபெற்றது.

பெரும் பூஜை: மூவராயன்பாளையம் மேலூர் கிராமத்தில் கலிங்காயி கூட்டம் கோயிலில் பெரும் பூஜை விழாவில் திங்கள்கிழமை இரவு சுவாமி அருள்பாலிக்க செல்லுதல், வீட்டு கோவில் பூஜை, பொங்கல் வைத்தல், முப்பூஜை விழா நடைபெற்றது. விழாவில் செவ்வாய்க்கிழமை கிடா வெட்டுதல் நிகழ்வும் , சிறப்பு பூஜைகள் நடைபெற்றது.

ਪੰਜਾਬ ਨੈਸ਼ਨਲ ਬੈਂਕ punjab national bank
भरोसे का प्रतीक
the name you can BANK upon

சாஸ்த்ரா சென்டர்

சர்க்கிள் அலுவலகம், திருச்சி, PNB ஹவுஸ், திருச்சி - தஞ்சாவூர் சாலை, கைலாசபுரம், திருச்சி - 620 014
தொலைபேசி : 0431-2521165, மின்னஞ்சல் : cs8327@pnb.co.in

அசையா சொத்துக்கள் விற்பனைக்கான விற்பனை அறிவிப்பு

பிணைக்காப்பு நிதிச்சொத்து மறுசீரமைப்பு பிணைச்சொத்து பாதுகாப்பு (அமலாக்கம்) சட்டம் 2002 - உடன் படிக்க - பிணைக்காப்பு (அமலாக்கம்) விதிகள் 2002 ன் விதி 8(6) ன் கீழ் அசையா சொத்துக்கள் விற்பனைக்கான மின்னணு ஏல விற்பனை அறிவிப்பு

இதன் மூலம் பொதுமக்களுக்குப் பரவலாகவும் கடன்தாரர்(கள்) மற்றும் ஜாமீன்தாரர்(கள்) ஆகியோருக்குக் குறிப்பாகவும் அறிவிப்பது யாதெனில், உரிய கடன்தாரர்(கள்) மற்றும் ஜாமீன்தாரர்(கள்) ஆகியோரிடமிருந்து வங்கிக்கு/ஈடு பெற்றுக் கடனளித்த நிறுவனத்துக்கு வர வேண்டியுள்ள நிலுவைத் தொகைகளைத் திரும்பப் பெறும் பொருட்டு, ஈடு பெற்றுக் கடனளித்த நிறுவனத்திடம் அடமானம் / அடகு வைக்கப்பட்டுள்ளவையும் வங்கியின் / ஈடு பெற்றுக் கடனளித்த நிறுவனத்தின் அதிகாரப்பூர்வ அலுவலரால் முறையான / நேரடி / அடையாள சுவாதீனம் செய்யப்பட்டுள்ளவையுமான கீழே விவரிக்கப்பட்டுள்ள அசையாச் சொத்துக்கள் **"உள்ளது உள்ள இடத்தில்", "உள்ளது உள்ளபடி" மற்றும் "உள்ள இடத்தில் உள்ள அனைத்தும்"** எனும் முறையில் கீழ்க்காணும் அட்டவணையில் குறிப்பிடப்பட்டுள்ள நாளில் விற்பனை செய்யப்பட உள்ளன. குறைந்தபட்ச விலை மற்றும் டேவணித்தொகை (EMD) ஆகியவை கீழ்க்காணும் அட்டவணையில் அந்தந்தச் சொத்துக்களின் எதிரே குறிப்பிடப்பட்டுள்ளன.

ஜாமீன் சொத்துக்கள் விபரம்

தொகுப்பு எண்	10
கிளையின் பெயர்	KK நகர், திருச்சி
கணக்கின் பெயர் & முகவரி	R மனோகரன்
கடன்தாரர் / ஜாமீன்தாரர்கள் பெயர் மற்றும் முகவரி, கணக்கு கடன்தாரர் :	கடன்தாரர் - திரு R மனோகரன், எண். 13/9, 3 வது தளம், ஸ்ரீ தேவி அபார்ட்மெண்ட்ஸ், 35A, 5A, குறுக்கு, தில்லை நகர், திருச்சி - 620 018 கடன்தாரர் - திரு R மனோகரன், ஃப்ளாட் எண். 402, நான்காவது தளம், MKB எலினா, காமராஜ் தெரு, KK நகர், திருச்சி - 620 021 கூட்டு - கடன்தாரர் - M சுகன்யா, க/பெ. R மனோகரன், எண். 13/9, 3 வது தளம், ஸ்ரீ தேவி அபார்ட்மெண்ட்ஸ், 35A, 5A, குறுக்கு, தில்லை நகர், திருச்சி - 620 018 கூட்டு - கடன்தாரர் - M சுகன்யா, க/பெ. R மனோகரன், ஃப்ளாட் எண். 402, நான்காவது தளம், MKB எலினா, காமராஜ் தெரு, KK நகர், திருச்சி - 620 021
அடமானம் செய்யப்பட்ட அசையா சொத்துக்கள் விபரம் / உரிமையாளர் பெயர் (சொத்து(க்களை) அடமானம் செய்தவர்)	லாட் எண் : 10 திரு R. மனோகரன் த/பெ. திரு V ராமலிங்கம் என்பவருக்கு சொந்தமான சொத்து மற்றும் அதனுடன் கூடிய சகல உரிமைகள் மற்றும் உடைமைகள் முழுவதும். **பட்டியல் A** –திருச்சிராப்பள்ளி மாவட்டம், ஸ்ரீரங்கம் தாலுக்கா, திருச்சிராப்பள்ளி பதிவு மாவட்டம், K - சாத்தனூர் சார்பதிவு மாவட்டம், K - சாத்தனூர் கிராமம், சர்வே எண். 2/6 பகுதி, KK நகர், திருச்சிராப்பள்ளி, காமராஜ் தெருவில் அமையப்பெற்ற கதவு எண். 29 வைக்கொண்ட சொத்து மற்றும் அதனுடன் கூடிய சகல உரிமைகள் மற்றும் உடைமைகள் முழுவதும். **இதன் நான்கெல்லைகளாவன –** வடக்கு - ப்ளாட் எண். 402 & 403, கிழக்கு - ப்ளாட் எண். 408, தெற்கு - 30 அடி சாலை, மேற்கு - ப்ளாட் எண். 406., இவைகளுக்கு மத்தியில் உள்ள அளவீடுகளாவன – கிழமேல் இருபுறமும் - 50 அடி., தென்வடல் இருபுறமும் - 80 அடி., என மொத்தம் 4000 சதுர அடி (371.61 சதுர மீட்டர்) பரப்பளவு கொண்ட காலி சைட் மற்றும் அதனுடன் கூடிய பாமூல் பாதை உரிமைகள் மற்றும் இதர வழி வசதி உரிமைகள் ஆகியன. **பட்டியல் B –** இதன் மேற்கண்ட பட்டியல் A சொத்தில் உள்ள 7.55% பிரிபடாத பங்கு அதாவது 303 சதுர அடி (283 சதுர அடி + 20 சதுர அடி) (28.15 சதுர மீட்டர்) பரப்பளவுடனான சொத்து. இது திருச்சிராப்பள்ளி மாநகராட்சி, ரீ சர்வே வார்டு AH, ப்ளாக் எண். 27, T.S. எண். 22,திருச்சி மாநகராட்சி, காமராஜர் தெருவில் அமைந்துள்ளது.
சர்ஃபாசி சட்டம் 2002 பிரிவு 13(2)-ன் கீழான கோரிக்கை அறிவிப்பு தேதி	09.05.2016
31.07.2023-ம் தேதியின் படியிலான நிலுவைத்தொகை	31-07-2023 ம் தேதியின் படியிலான ரூ. 60,89,315.57/- (ரூபாய். அறுபது இலட்சத்து எண்பத்து ஒன்பதாயிரத்து முன்னூற்று பதினைந்து மற்றும் பைசா ஐம்பத்து ஏழு மட்டும்) மற்றும் 01.08.2023 முதல் மேற்கொண்டு வரும் வட்டி, செலவுகள் மற்றும் இதர கட்டணங்கள் ஆகியன.
சர்ஃபாசி சட்டம் 2002 பிரிவு 13(4) ன் கீழான சுவாதீன அறிவிப்பு தேதி	12.01.2023
சுவாதீனத்தின் வகை அடையாள சுவாதீனம் / இயற்சுவாதீனம் / ஆக்கப்பூர்வ சுவாதீனம்	அடையாள சுவாதீனம்
அடிப்படை விலை	லாட் எண். 10 – ரூ. 27,50,000/- (ரூபாய் இருபத்து ஏழு இலட்சத்து ஐம்பதாயிரம் மட்டும்)
டேவணித் தொகை (EMD) டேவணித்தொகை செலுத்துவதற்கான கடைசி நாள்	லாட் எண். 10 – ரூ.2,75,000/- (ரூபாய். இரண்டு இலட்சத்து எழுபத்து ஐந்தாயிரம் மட்டும்) மின்னணு ஏலம் தொடங்கும் தேதி அல்லது அதற்கு முன்பு
ஏல உயர்வுத் தொகை	லாட் எண். 10 – ரூ. 50,000/- (ரூபாய் ஐம்பதாயிரம் மட்டும்)
மின்னணு ஏல தேதி / நேரம்	01.09.2023 (வெள்ளி கிழமை) லாட் எண். 10 – நேரம் - காலை 10.00 மணி முதல் மாலை 04.00 மணி வரை
ஜாமீன் பெற்று கடனளித்தவருக்கு தெரிந்த வில்லங்கங்களின் விபரங்கள்	தெரியவில்லை

2002 ஆம் ஆண்டு கடனீட்டுச் சொத்துகள் மீதான உரிமை அமலாக்க விதிகளில் நிர்ணயிக்கப்பட்டுள்ள விதிமுறை நிபந்தனைகள் படியும், இங்கு குறிப்பிடப்பட்டுள்ள நிபந்தனைகள் படியும் விற்பனை நடத்தப்படும்.

1. மேற்கண்ட சொத்துக்கள் **"உள்ளது உள்ள இடத்தில்", "உள்ளது உள்ளபடி" மற்றும் "உள்ள இடத்தில் உள்ள அனைத்தும்"** எனும் முறையில் விற்பனை செய்யப்பட உள்ளன.
2. மேலே உள்ள அட்டவணையில் கடனீட்டுச் சொத்துக்களின் விபரங்கள் அதிகாரப்பூர்வ அலுவலருக்கு உச்சபட்சமாகத் தெரிந்த வரையில் குறிப்பிடப்பட்டுள்ளன. எனினும் இந்த அறிவிப்பில் ஏதேனும் பிழையோ முரண்பாடோ விடுபாடோ இருப்பின் அதற்கு அதிகாரப்பூர்வ அலுவலர் பொறுப்பாக மாட்டார்.
3. விற்பனையானது **https://www.mstcecommerce.com** இணையதளத்தில் அளிக்கப்பட்டுள்ள ஏல முகப்பில் 01.09.2023 (வெள்ளிக்கிழமை) காலை 10.00 மணி முதல் மாலை 04.00 கீழே கையொப்பமிட்டுள்ளவரால் நடத்தப்படும்.
விற்பனையின் விரிவான விதிமுறைகள் மற்றும் நிபந்தனைகள் அறிய அணுகுக : **https://www.ibapi.in, https://eprocure.gov.in/epublish/app, http://www.mstcecommerce.com, www.pnbindia.in,**

நாள்: 07.08.2023
இடம்: திருச்சி

அதிகாரப்பூர்வ அலுவலர்
பஞ்சாப் நேஷனல் வங்கி

kotak
கோட்டக் மஹிந்திரா பேங்க் லிமிடெட்

பதிவு அலுவலகம்: எண்.27, BKC, C-27, G-பிளாக், பாந்த்ரா குர்லா காம்ப்ளக்ஸ், பாந்த்ரா (கிழக்கு), மும்பை - 400 051.
கிளை அலுவலகம்: எண்.B36, ரத்னா என்கிளேவ், சாஸ்திரி சாலை, தில்லை நகர், திருச்சி - 620 018.

அசையாச்சொத்துக்கள் விற்பனைக்கான மின்னணு ஏல விற்பனை அறிவிப்பு

பிணைக்காப்பு நிதிச்சொத்து மறுசீரமைப்பு மற்றும் பிணைக்காப்பு (செயலாக்கம்) சட்டம் 2002 - உடன் படிக்க - பிணைச்சொத்து பாதுகாப்பு (அமலாக்கம்) விதிகள் 2002 இன் விதி 8(6) க்கான விதி விலக்கு -இன் கீழ் அசையாச்சொத்துக்கள் விற்பனைக்கான மின்னணு ஏல விற்பனை அறிவிப்பு.

இதன் மூலம் பொதுமக்களுக்கும் குறிப்பாக கடன்தாரர்(கள்) மற்றும் ஜாமீன்தாரர்(களுக்கும்) அறிவிக்கப்படுவது யாதெனில், **கோட்டக் பேங்க் லிமிடெட்** (ஜாமீன் பெற்று கடனளித்தவர்) - க்கு அடமானம் / கடன் பொறுப்பு ஏற்படுத்தப்பட்டு, ஜாமீன் பெற்று கடனளித்தவரின் அதிகாரப்பூர்வ அலுவலரால் 08.01.2022 அன்று சுவாதீனம் எடுக்கப்பட்ட இதன் கீழ் விவரிக்கப்பட்ட அசையா சொத்து, **31.07.2023-**ஆம் தேதியின் படியிலான நிலுவைத்தொகை **ரூ.7,82,71,704.67 (ரூபாய் ஏழு கோடியே எண்பத்து இரண்டு இலட்சத்து எழுபத்து ஓராயிரத்து எழுநூற்று நான்கு மற்றும் பைசா அறுபத்தேழு மட்டும்)** மற்றும் 01.08.2023 முதல் மேற்கொண்டு வட்டி, செலவுகள், கட்டணங்கள் மற்றும் செலவுகள் ஆகியவற்றை **M/s. கார்த்திகேயன் திருஞானம் மற்றும் பிறர், திருச்சி மற்றும் பிறரிடமிருந்து** வசூலிப்பதற்காக, "இருக்கின்ற இடத்தில்" "இருக்கின்ற நிலையில்" "இருக்கின்ற இடத்தில் உள்ள அனைத்தும்" மற்றும் "திரும்ப பெறத்தகாத வகையில்" என்ற அடிப்படையில் மின்னணு ஏல முறையில் **11 செப்டம்பர் 2023** ஆம் தேதியன்று விற்பனை செய்யப்படவுள்ளன. சொத்துக்களின் விபரங்கள், அடிப்படை விலை (இவ்விலைக்கு குறைவாக சொத்துக்கள் விற்பனை செய்யப்பட மாட்டாது) மற்றும் டேவணித்தொகை உள்ளிட்ட விபரங்கள் குறிப்பாக இதன் கீழ்க்கண்ட அட்டவணையில் குறிப்பிடப்பட்டுள்ளன.

லாட் எண்.	விற்பனைக்குள்ளாகும் சொத்துக்களின் விபரம்	அடிப்படை விலை	டேவணித் தொகை
1	**சொத்து எண்.1 - இனம் எண்.1:** தஞ்சாவூர் மாவட்டம், பட்டுக்கோட்டை பதிவு மாவட்டம், பட்டுக்கோட்டை இணை எண். II சார்பதிவு மாவட்டம், பட்டுக்கோட்டை தாலுக்கா, பட்டுக்கோட்டை டவுன், அறந்தாங்கி சாலை, காந்தி சிலையிலிருந்து மாதா கோவில் செல்லும் தெரு, பட்டுக்கோட்டை நகராட்சி எல்லைக்குட்பட்ட, பழைய சர்வே எண். 59/4க்கு தொடர்புடைய சர்வே எண். 59/1A1க்கு தொடர்புடைய T S எண். 46/2 இல் அமையப்பெற்ற மொத்த பரப்பு 36-3/4 குழி இடத்தில் உள்ள 21 3/4 குழி இடத்தில் உள்ள 15 குழி (2178 சதுர அடி) பரப்பளவு கொண்ட இடம் மற்றும் அதில் கட்டப்பட்ட "PRT மஹால் & லாட்ஜ்" என்ற பெயர் மற்றும் பாணியில் கதவு எண். 100/A1, 100/A2க்குடைய கட்டிடம். இதன் எல்லைகளாவன: வடக்கு - PR திருஞானத்துக்கு சொந்தமான கட்டிடம், கிழக்கு - சாலைக்கு சொந்தமான கட்டிடம், மேற்கு - S D ராஜகோபாலுக்கு சொந்தமான கட்டிடம், தெற்கு - சுந்தர மூர்த்திக்கு சொந்தமான கட்டிடம். **இனம் எண்.2** : தஞ்சாவூர் மாவட்டம், பட்டுக்கோட்டை பதிவு மாவட்டம், பட்டுக்கோட்டை இணை எண்.II சார்பதிவு மாவட்டம், பட்டுக்கோட்டை தாலுக்கா, பட்டுக்கோட்டை டவுன், அறந்தாங்கி சாலை, பட்டுக்கோட்டை நகராட்சி எல்லைக்குட்பட்ட சர்வே எண். 59/A இல் அமையப்பெற்ற மொத்த பரப்பு 3158.10 சதுர அடி பரப்பளவு கொண்ட இடம் மற்றும் அதில் கட்டப்பட்ட "PRT மஹால் & லாட்ஜ்" என்ற பெயர் மற்றும் பாணியில் கதவு எண். 100/A1, 100/A2-க்குடைய கட்டிடம். இதன் எல்லைகளாவன: தெற்கு - கார்த்திகேயன் & வெங்கேசனுக்கு சொந்தமான சொத்து, மேற்கு - ராஜா @ ராஜகோபாலுக்கு சொந்தமான கட்டிடம், வடக்கு - சாலை, கிழக்கு - சாலை.	**ரூ. 5,20,00,000/- (ரூபாய் ஐந்து கோடியே இருபது இலட்சம் மட்டும்)**	**ரூ. 52,00,000/- (ரூபாய் ஐம்பத்து இரண்டு இலட்சம் மட்டும்)**
2	**சொத்து எண்.2 - இனம் எண்.1:** தஞ்சாவூர் மாவட்டம், பட்டுக்கோட்டை பதிவு மாவட்டம், பட்டுக்கோட்டை இணை எண்.I சார்பதிவு மாவட்டம், பட்டுக்கோட்டை தாலுக்கா, மகாராஜசமுத்திரம் கிராமம், விவேகானந்தா நகர், பட்டுக்கோட்டை நகராட்சிக்குட்பட்ட பகுதியில் அமையப்பெற்ற கிழமேல் தென்வடல் இருபுறமும் - 40 அடி, தென்வடல் கிழமேல் இருபுறமும் 60 அடி., என மொத்தம் 2400 சதுர அடி பரப்பில் அமையப்பெற்ற வீட்டுமனை இடம். இதற்கான சர்வே எண். 209/2A மற்றும் அதில் கட்டப்பட்ட கதவு எண். 470/3-5 யைக்கொண்ட கட்டிடம் ஆகியன. இது பின்வரும் எல்லைகளுக்கு மத்தியில் உள்ளது. தெற்கு - ராஜேஸ்வரிக்கு சொந்தமான வீடு, மேற்கு - வசந்தாவுக்கு சொந்தமான வீடு, வடக்கு - 23 அடி அகல 3 வது குறுக்கு சாலை, கிழக்கு - சர்வே எண். 209/3 இல் உள்ள சொத்து. **இனம் எண்.2:** தஞ்சாவூர் மாவட்டம், பட்டுக்கோட்டை பதிவு மாவட்டம், பட்டுக்கோட்டை இணை எண்.I சார்பதிவு மாவட்டம், பட்டுக்கோட்டை தாலுக்கா, மகாராஜசமுத்திரம் கிராமம், பழைய சர்வே எண். 209/2க்கு தொடர்புடைய புதிய சர்வே எண். 209/3 இல் விவேகானந்தா நகர், பட்டுக்கோட்டை நகராட்சியில் அமையப்பெற்ற 1960.70 சதுர அடி பரப்பில் கட்டப்பட்ட கதவு எண். 470/3-5 யைக்கொண்ட கட்டிடம் ஆகியன., இது பின்வரும் எல்லைகளுக்கு மத்தியில் உள்ளது. தெற்கு - பன்னீர் செல்வம் செட்டியாருக்கு சொந்தமான வீடு, மேற்கு - சர்வே எண். 209/2A இல் உள்ள சொத்து, வடக்கு - 23 அடி அகல 3 ஆவது குறுக்கு சாலை, கிழக்கு - சுமதிக்கு சொந்தமான வீடு.	**ரூ. 1,35,00,000/- (ரூபாய் ஒரு கோடியே முப்பத்து ஐந்து இலட்சம் மட்டும்)**	**ரூ. 13,50,000/- (ரூபாய் பதிமூன்று இலட்சத்து ஐம்பதாயிரம் மட்டும்)**

மின்னணு ஏலம் மூலம் அசையா சொத்துக்கள் விற்பனை செய்வதற்கான விதிகள் மற்றும் நிபந்தனைகளாவன :-

1. சொத்துக்கள் ஆய்வு - விருப்பமுள்ள நபர்கள் சொத்துக்களை **10.08.2023 முதல் 08.09.2023 வரை காலை 11.00 மணி முதல் பிற்பகல் 03.00 மணி வரை** ஆய்வு செய்து கொள்ளலாம். **டேவணித்தொகை சமர்ப்பிப்பதற்கான கடைசி தேதி & நேரம் - 08.09.2023 மாலை 05.00 மணி வரை.**

2. ஏல விற்பனை "ஆன்லைன் மின்னணு ஏலம் / விலைகோரல்" மூலம் KMBL இன் அங்கீகரிக்கப்பட்ட சேவைதாரரான அஹமதாபாத், குஜராத் - 380 006 இல் அலுவலகம் கொண்ட M/s ஆக்ஷன் டைகர், உதவி எண்கள். **திரு. பிரவீன் குமார் அவர்களை 7961200515 / 9722778828 மற்றும் மேலும் உதவிக்கான மின்னஞ்சல் முகவரி sales@AuctionTiger.net வலைதளம் - www.AuctionTiger.net** மூலம் நடைபெறும்.

3. ஏல விற்பனை **2023 செப்டம்பர் 11 ஆம் தேதியன்று காலை 11.00 மணி முதல் நண்பகல் 12.00 மணி வரை**., முடிவுறு நேத்திற்கு கடைசி ஐந்து நிமிடத்தில் விலைகோரல் வைக்கப்படும் பட்சத்தில், தன்னியல்பான 5 நிமிடம் கால நீட்டிப்புடன் நடைபெறும்.

4. சமர்ப்பிக்கப்படும் விலைப்புள்ளி அதிகாரப்பூர்வ அலுவலரால் ("AO") நிர்ணயிக்கப்பட்ட அடிப்படை விலைக்கு அதிகமானதாக இருக்க வேண்டும். மேலும் தங்களது விலைப்புள்ளியை **இந்திய ரூபாய் 2,00,000/- (ரூபாய் இரண்டு இலட்சம் மட்டும்) என்ற மடங்கில் அதிகரிக்க வேண்டும்.**

5. சொத்துக்கள் அதிகாரப்பூர்வ அலுவலரால் ("AO") நிர்ணயிக்கப்பட்ட அடிப்படை விலைக்கு குறைவாக விற்கப்படமாட்டாது. அடிப்படை விலைக்கு குறைவாக கோரப்பட்ட விலைப்புள்ளி நிராகரிக்கப்படுவதோடு, டேவணித்தொகையும் அபராதமாக கருதி கழித்துக்கொள்ளப்படும்.

6. வெற்றி பெற்ற ஏலதாரர் விலைத்தொகையின் 25% தொகையை (ஏற்கனவே செலுத்திய டேவணித்தொகை உட்பட) மின்னணு ஏல செயல்முறைகள் முடிவுற்றவுடன் 24 மணி நேரங்களுக்குள் செலுத்த வேண்டும்., வாங்கிய தொகையின் மீதி 75% தொகையை வங்கியால் விற்பனை உறுதிப்படுத்தப்பட்ட தேதியிலிருந்து 15 (பதினைந்தாவது) ஆவது நாள் அல்லது அதிகாரப்பூர்வ அலுவலரால் ("AO") தனது சொந்த அதிகாரத்தில் எழுத்து பூர்வமாக அதிகரிக்கப்பட்ட காலக்கெடுவுக்குள் செலுத்த வேண்டும்., தவறும் பட்சத்தில், வாங்குபவரால் ஏற்கனவே செலுத்தப்பட்ட அனைத்து தொகைகளையும் வங்கி அபராதமாக கருதி கழித்துக்கொள்ளும். ஏலதாரர் உரிய காலக்கெடுவுக்குள் ஏலத்தொகையை 24 மணி நேரத்துக்குள் செலுத்த தவறும் பட்சத்தில், அவரது விலைப்புள்ளி ரத்து செய்யப்பட்டு அடுத்தபடியாக அதிகபட்ச விலைப்புள்ளி கோரியுள்ள ஏலதாரருக்கு சொத்தை வாங்க வாய்ப்பளிக்கப்படும்.

7. ஏலதாரர்கள் விற்பனைக்கான விதிகள் மற்றும் நிபந்தனைகளுக்கு வங்கியின் வலைதளத்திலுள்ள தொடர்பை விலைப்புள்ளிகளை சமர்ப்பிப்பதற்கும் ஏல செயல்முறைகளில் பங்கேற்பதற்கும் முன்பே வலைதளம் **www.AuctionTiger.net** பார்வையிடுமாறு அறிவுறுத்தப்படுகிறார்கள்.

8. விலைப்புள்ளிகள் ஆன்லைனில் மட்டும் உரிய படிவ(ங்களில்) முறையாக நிரப்பப்பட்ட பொருத்தமான விபரங்களுடன் சமர்ப்பிக்கப்பட வேண்டும். இதர படிவங்களில் நிரப்பப்பட்ட / முழுமையற்ற விலைப்புள்ளிகள் முற்றிலும் நிராகரிக்கப்படும்.

9. அனைத்து விலைப்புள்ளிகளும் பின்வரும் KYC ஆவண நகல்களுடன் இருக்க வேண்டும். (i) PAN அட்டை, (ii) ஆதார் அட்டை / கடவுச்சீட்டு, (iii) நடப்பு முகவரி சான்று, (iv) மதிப்புறு மின்னஞ்சல் முகவரி, (v) தொடர்பு எண்/கள் (அலைபேசி / தொலைபேசி) போன்றவை மேற்சொன்ன ஆவணங்களின் ஒளிவருடப்பட்ட நகல்களை மேற்சொன்ன மின்னஞ்சல் முகவரிக்கு சமர்ப்பிக்கப்பட வேண்டும். இதன் மேற்கண்ட ஒவ்வொரு சொத்துக்கும் / ஒவ்வொரு இனத்துக்கும் எதிராக குறிப்பிட்டுள்ள டேவணித்தொகையை **"KOTAK MAHINDRA BANK LTD"** என்ற பெயருக்கு **திருச்சி**யில் செலுத்தத்தக்கவாறு எடுக்கப்பட்ட கேட்பு வரைவோலையாக (DD) செலுத்த வேண்டும்.

10. விருப்பமுள்ள ஏலதாரர்கள் டேவணித்தொகை சமர்ப்பித்ததற்க்கான சான்றை வங்கியால் ஏற்றுக்கொள்ளத்தக்க வடிவில் வங்கிக்கு சமர்ப்பிக்க வேண்டும்.

11. ஜாமீன் பெற்று கடனளித்தவரிடமிருந்து அல்லது / சேவைதாரரிடமிருந்து தேவையான தகவல்களை மின்னஞ்சல் மூலம் மட்டுமே அனுப்ப வேண்டியுள்ளதால், ஏலதாரர்கள் மதிப்புறு மின்னஞ்சல் முகவரியை கொண்டிருக்க வேண்டும்.

12. விருப்பமுள்ள உத்தேச ஏலதாரர்கள், மின்னணு ஏலத்தில் பங்கேற்பதற்கான ஆன்லைன் / நேரடி பயிற்சிக்கு இதன் மேற்குறிப்பிட்ட விபரங்களில் சேவைதாரரை தொடர்பு கொள்ளலாம்.

13. எனினும், அதிகாரப்பூர்வ அலுவலரோ ("AO") அல்லது ஜாமீன் பெற்று கடனளித்தவரோ அல்லது சேவைதாரரோ ஏதேனும் தொழில்நுட்ப கோளாறு / மின் துண்டிப்பு போன்றவற்றுக்கு பொறுப்பல்ல.

14. வெற்றி பெறாத ஏலதாரர்களின் டேவணித்தொகை மின்னணு ஏல செயல்முறைகள் முடிவுற்ற தேதியிலிருந்து 7 வேலை நாட்களுக்குள் திருப்பி தரப்படும்.

15. விற்பனையானது வங்கியின் உறுதிப்படுதலுக்கு கட்டுப்பட்டதாகும். கடன்தாரர் / ஜாமீன்தாரர்(கள்) ஜாமீன் பெற்று கடனளித்தவருக்கு நிலுவையாக உள்ள தொகை முழுவதையும் மின்னணு ஏலத்துக்காக குறிக்கப்பட்ட தேதி மற்றும் நேரத்துக்கு முன்பாக செலுத்தி விட்டால், விற்பனை நடத்தப்படமாட்டாது.

16. அதிகாரப்பூர்வ அலுவலரின் ("AO") சிறந்த அறிவுக்கும் தகவலுக்கும் எட்டிய வரையில் மேற்சொன்ன சொத்துக்களின் மீது வேறு எந்த வில்லங்கமும் இல்லை., எனினும், உத்தேச ஏலதாரர்கள் சொத்துரிமை / வில்லங்கங்கள் போன்றவை தொடர்பாக தங்களது சுய சிரத்தையுடன் சுதந்திரமான விசாரணைகளை மேற்கொள்ள அறிவுறுத்தப்படுகிறார்கள். அதிகாரப்பூர்வ அலுவலர், ("AO") மேற்சொன்ன அடமான சொத்து தொடர்பாக ஏதேனும் கடன் பொறுப்பு, வில்லங்கம் சொத்து வரி அல்லது அரசுக்கான மற்றும் இதர வரி நிலுவைகள் ஏதேனும் இருப்பின் அதற்கு பொறுப்பல்ல. சொத்துக்கள் ஜாமீன் பெற்று கடனளித்தவருக்கு தெரிந்தோ அல்லது தெரியாமலோ இருக்கின்ற மற்றும் வருங்கால வில்லங்கங்களுடனேயே விற்பனை செய்யப்படுகின்றன.

17. அதிகாரப்பூர்வ அலுவலர், ("AO") எக்காரணமும் கூறாமல் ஏதேனும் விலைப்புள்ளி / விலைப்புள்ளிகளை (ஏதேனும் சொத்துக்கான) நிராகரிக்க அல்லது மின்னணு ஏலத்தை ரத்து செய்ய உண்டான அதிகாரத்தை தன்னகத்தே கொண்டுள்ளவராவார்.

18. விற்பனைக்கான நிபந்தனைகளுக்கு கட்டுப்படுதலின் பேரில், அதிகாரப்பூர்வ அலுவலர் ("AO") வாங்குபவர் பெயரில் "விற்பனைக்கான சான்றை" வழங்குவார். முத்திரை தீர்வை, பதிவு கட்டணங்கள், பரிமாற்ற கட்டணங்கள், VAT, TDS, GST போன்றவற்றை வாங்குபவரே ஏற்றுக்கொள்ள வேண்டும்.

TDS க்கான நிபந்தனைகளாவன :

பிடித்தம் செய்யப்பட வேண்டிய TDS	**ஏல விலையில் 1%**

* TDS ஆனது அடமானதாரர்/கள் பெயரிலேயே பிடித்தம் செய்து செலுத்தப்பட வேண்டும்.
* அடமான சொத்து கூட்டு உரிமை கொண்டதாக இருந்து, கிரைய ஆவணத்தில் உரிமைத்தன்மையின் விகிதாச்சார பங்கு தெளிவாக குறிப்பிடப்படவில்லையெனில், TDS ஆனது முதல் உரிமையாளர் பெயரிலேயே செலுத்தப்பட வேண்டும். மேலும் அவ்வாறு விகிதாச்சாரம் தெளிவாக இருக்கும் பட்சத்தில் TDS யை அவரவர் விகிதாச்சார வீதத்தில் பிடித்தம் செய்திட வேண்டும்.
* ஏலத்தில் வாங்குபவர், TDS தொகையை செலுத்திய பிறகு, படிவம் எண். 16A யை TDS செலுத்தப்பட்டு உறுதிப்படுத்தப்பட்டதற்கான சான்றாக சமர்ப்பிக்கப்பட வேண்டும்.

19. விற்பனையானது சர்ஃபாசி சட்டம் / விதிகள் 2002 இல் விவரிக்கப்பட்ட நிபந்தனைகள் மற்றும் இதன் மேற்குறிப்பிட்டுள்ள நிபந்தனைகளுக்கு கட்டுப்பட்டதாகும்.
20. சொத்துக்கள் ஆய்வு உள்ளிட்ட ஏலத்திற்கான இதர மேல் விபரங்களுக்கு விருப்பமுள்ள ஏலதாரர்கள் **திரு. ஸ்ரீதரா S அவர்களை தொலைபேசி எண். 9916165915இல் அனைத்து வேலை நாட்களிலும் காலை 10.00 மணி முதல் மாலை 05.00 மணி வரை** தொடர்பு கொள்ளலாம்.

தேதி : 09.08.2023
இடம் : திருச்சி

(அதிகாரப்பூர்வ அலுவலர்)
கோட்டக் மஹிந்திரா பேங்க்

மக்களவைத் தேர்தல்: மாதிரி வாக்குப்பதிவு

திருச்சி, ஆக. 8: திருச்சியில் மக்களவைத் தேர்தலுக்கான முன்னோட்டமாக அங்கீகரிக்கப்பட்ட அரசியல் கட்சிகளின் முன்னிலையில் செவ்வாய்க்கிழமை மாதிரி வாக்குப்பதிவு நடைபெற்றது.

திருச்சி மாவட்டத்தில் திருச்சி, கரூர், பெரம்பலூர் ஆகிய மக்களவைத் தொகுதிகள் உள்ளன. இந்த 3 தொகுதிகளுக்கான மாதிரி வாக்குப் பதிவு செவ்வாய்க்கிழமை நடைபெற்றது. அரசியல் கட்சியினர் முன்னிலையில் இந்த பணியை தொடங்கி வைத்து திருச்சி மாவட்ட தேர்தல் நடத்தும் அலுவலரும், ஆட்சியருமான மா. பிரதீப்குமார் கூறியது:

வாக்குப் பதிவு இயந்திரங்களில் ரேண்டமாக 5 சதவீத இயந்திரங்களை தேர்வு செய்து வாக்குப்பதிவு நடைபெற்றது. அங்கீகரிக்கப்பட்ட அரசியல் கட்சிகளைச் சேர்ந்த (தேசிய கட்சிகள், மாநில கட்சிகள்) பிரதிநிதிகள் முன்னிலையில் இந்த வாக்குப்பதிவு நடைபெற்றுள்ளது. இயந்திரங்கள் அனைத்தும் வாக்குப்பதிவுக்கு தயாராக இருப்பது உறுதி செய்யப்பட்டுள்ளது. இதன் விவரங்கள் தேர்தல் ஆணையத்துக்கு அறிக்கையாக அனுப்பப்படும் என்றார் ஆட்சியர்.

திருச்சி ஆட்சியரகத்தில் செவ்வாய்க்கிழமை நடைபெற்ற மாதிரி வாக்குப்பதிவு.

மின்னணு வாக்குப்பதிவு இயந்திரம், கட்டுப்பாட்டு இயந்திரம், யாருக்கு வாக்களித்தோம் என்பதை உறுதி செய்யும் விவிபேட் இயந்திரங்களைக் கொண்டு இந்த மாதிரி வாக்குப்பதிவு நடைபெற்றது.

இந்த நிகழ்வின்போது, திமுக, அதிமுக, காங்கிரஸ், பாஜக, கம்யூ. உள்ளிட்ட பல்வேறு கட்சிகளைச் சேர்ந்த பிரதிநிதிகள் மற்றும் தேர்தல் பிரிவு அலுவலர்கள் உடனிருந்தனர்.

இந்து முன்னணி ஆர்ப்பாட்டம்

திருச்சி, ஆக. 8: திருச்சி மாவட்ட நிர்வாகம் இந்துக்களுக்கு எதிராக செயல்படுவதாகக் கூறி, இதை கண்டித்து இந்து முன்னணியினர் மரக்கடை பகுதியில் செவ்வாய்க்கிழமை ஆர்ப்பாட்டத்தில் ஈடுபட்டனர்.

ஆர்ப்பாட்டத்துக்கு இந்து முன்னணி மாநிலத் தலைவர் காடேஸ்வரா சுப்பிரமணியன் தலைமை வகித்தார். சிறப்பு அழைப்பாளராக பாஜக மூத்த தலைவர் எச். ராஜா பங்கேற்று கண்டன உரை நிகழ்த்தினார். இதில் மாவட்ட பொதுச் செயலாளர் ப. மனோஜ்குமார் உள்ளிட்ட திரளான பாஜக, இந்து முன்னணி, விசுவ ஹிந்து பரிஷத் நிர்வாகிகள் கலந்து கொண்டனர்.

ஆர்ப்பாட்டத்தில், திருச்சி மாவட்ட நிர்வாகம், மதமாற்றம், இஸ்லாமிய பயங்கரவாதம், திருக்கோயில் நிலங்கள் ஆக்கிரமிப்பு போன்ற செயல்களுக்கு ஆதரவாகவும், இந்துக்களுக்கு எதிராகவும் செயல்படுவதாக கூறியும், இவற்றைக் கண்டித்தும் முழக்கங்கள் எழுப்பப்பட்டன.

முன்னதாக, 1993, ஆகஸ்ட் 8 அன்று சென்னை ஆர்எஸ்எஸ் அலுவலகத்தில் நடைபெற்ற குண்டுவெடிப்பில் பலியானவர்களுக்கு அஞ்சலி செலுத்தப்பட்டது. திருச்சி மாநகர காவல் ஆணையர் என். காமினி தலைமையில் நூற்றுக்கணக்கான போலீஸார் தீவிர பாதுகாப்புப் பணியில் ஈடுபட்டனர்.

மாநகரின் சில பகுதிகளில் இன்று குடிநீர் விநியோகம் ரத்து

திருச்சி, ஆக. 8: திருச்சி மாநகரில் குறிப்பிட்ட சில பகுதிகளில் புதன்கிழமை குடிநீர் விநியோகம் இருக்காது.

திருச்சியில் குறிப்பிட்ட பகுதிகளில் மின்தடை காரணமாக குடிநீர் நிலையங்களில் நீரேற்றம் செய்ய முடியாத காரணத்தால், கம்பரசம்பேட்டை தலைமை நீர்ப்பணி நிலையத்துக்குள்பட்ட மரக்கடை, விறகுபேட்டை ஆகிய பகுதிகளிலும், டர்பைன் நீர்ப்பணி நிலையத்துக்குள்பட்ட மலைக்கோட்டை மற்றும் சிந்தாமணி ஆகிய பகுதிகளிலும், பெரியார் நகர் கலெக்டர்வெல் நீர்ப்பணி நிலையத்துக்குள்பட்ட தில்லைநகர், அண்ணாநகர், காஜாப்பேட்டை, கண்டோன்மென்ட், ஜங்ஷன், உய்யக்கொண்டான் திருமலை, தெற்கு ராமலிங்க நகர் , ஆல்ஃபா நகர், பாத்திமா நகர், கருமண்டபம் மற்றும் கல்லாங்காடு ஆகிய பகுதிகளிலும், கலெக்டர்வெல் அய்யாளம்மன் படித்துறை நீர்ப்பணி நிலையத்துக்குள்பட்ட புகழ் நகர், பாரிநகர் , எல்லைக்குடி , காவிரி நகர், கணேஷ் நகர், சந்தோஷ் நகர், ஆலத்தூர் , கல்கண்டார்கோட்டை , திருவெறும்பூர் வள்ளுவர் நகர், திருவெறும்பூர் ஒன்றிய காலனி, மற்றும் பிராட்டியூர் கூட்டுக் குடிநீர் திட்டத்தில் அடங்கும் ராம்ஜி நகர், பிராட்டியூர், எடமலைப்பட்டிபுதூர், விஸ்வாஸ் நகர், ஜெயாநகர், மற்றும் பிராட்டியூர் காவேரி நகர் ஆகிய பகுதிகளில் புதன்கிழமை (ஆக. 9) குடிநீர் விநியோகம் இருக்காது என திருச்சி மாநகராட்சி நிர்வாகம் தெரிவித்துள்ளது.

11 வட்டங்களில் ஆக.12–இல் ரேஷன் சிறப்பு குறைதீர் முகாம்

திருச்சி, ஆக. 8: திருச்சி மாவட்டத்தில் உள்ள 11 வட்டங்களிலும் சனிக்கிழமை (ஆக.12) பொதுவிநியோகத் திட்ட சிறப்பு குறைதீர்க்கும் முகாம் நடைபெறுகிறது.

இதுதொடர்பாக, ஆட்சியர் மா. பிரதீப்குமார் வெளியிட்டுள்ள செய்திக் குறிப்பு:

திருச்சி மாவட்ட வழங்கல் மற்றும் நுகர்வோர் பாதுகாப்புத்துறை மூலம் ஒவ்வொரு மாதமும் வட்ட அளவில் ஒரு கிராமத்தில் சனிக்கிழமையில் பொதுவிநியோகத் திட்ட சிறப்பு குறைதீர்க்கும் முகாம் நடத்தப்பட்டு வருகிறது. இதன்படி, சனிக்கிழமை (ஆக.12) 11 வட்டங்களில் குறைதீர் முகாம்கள் நடைபெறும்.

திருச்சி கிழக்கு வட்டத்தில் பாரதியார் சாலை-2, திருச்சி மேற்கு வட்டத்தில் பீமநகர்-2, திருவெறும்பூர் வட்டத்தில் அகரம்-2, திருவரங்கம் வட்டத்தில் அந்தநல்லூர்-1, மணப்பாறை வட்டத்தில் பண்ணப்பட்டி, மருங்காபுரி வட்டத்தில் வெங்கட்டநாயக்கன்பட்டி-2, லால்குடி வட்டத்தில் தச்சங்குறிச்சி, மண்ணச்சநல்லூர் வட்டத்தில் வலையூர், முசிறி வட்டத்தில் தும்பலம், துறையூர் வட்டத்தில் சிஎம்எஸ்-2, துறையூர் நகரம், தொட்டியம் வட்டத்தில் கமலாபுரம் ஆகிய பகுதிகளில் உள்ள நியாய விலைக் கடைகளில் பொதுவிநியோகத் திட்ட குறைதீர் முகாம் நடைபெறும். காலை 10 மணிக்கு தொடங்கி பிற்பகல் 1 மணி வரை நடைபெறும் இந்த முகாம்களில் அந்தந்தப் பகுதியைச் சேர்ந்த பொதுமக்கள் தவறாமல் கலந்து கொண்டு பயன்பெறலாம். அந்தந்த வட்டங்களில் நியமிக்கப்பட்டுள்ள கண்காணிப்பு அலுவலர்கள் தலைமையில் இக்கூட்டம் நடைபெறும் என்றார் ஆட்சியர்.

அரியமங்கலம் – துவாக்குடி இடையே அணுகுசாலை

அமைச்சர்கள் உறுதி

திருச்சி, ஆக. 8: திருச்சி அரியமங்கலம் முதல் துவாக்குடி வரையிலான அணுகுசாலை கண்டிப்பாக அமைக்கப்படும் என அமைச்சர்கள் கே.என். நேரு, அன்பில் மகேஸ் பொய்யாமொழி ஆகியோர் உறுதிபடத் தெரிவித்தனர்.

திருச்சி – தஞ்சாவூர் தேசிய நெடுஞ்சாலையில், அரியமங்கலம் பால்பண்ணை மற்றும் துவாக்குடி இடையே அணுகுசாலை அமைப்பது தொடர்பாக அமைச்சர்கள், ஆட்சியர், அணுகுசாலை மீட்பு கூட்டமைப்பினர் உள்ளிட்டோர் பங்கேற்ற ஆலோசனைக் கூட்டம் ஆட்சியரகத்தில் செவ்வாய்க்கிழமை நடைபெற்றது.

கூட்டத்தில் நகராட்சி நிர்வாகத் துறை அமைச்சர் கே.என். நேரு பேசியது: அணுகுசாலை அமைப்பது குறித்து முதல்வரிடம் தெரிவித்து, அதை உறுதியாக நிறைவேற்றுவோம். மக்களவைத் தேர்தல் வருவதால், சற்று தாமதம் ஆகலாம். ஆனால், நிச்சயம் நடவடிக்கை எடுக்கப்படும். இந்தப் பணி மத்திய அரசு மூலமாக நடைபெற்றால், அணுகுசாலைக்காக கையகப்படுத்தும் இடத்துக்கும் பணம் கொடுத்து விடுவார்கள். சாலையையும் அமைத்து விடுவார்கள். அதற்கான முயற்சியையும் தொடங்குகிறோம் என்றார்.

பள்ளிக் கல்வித்துறை அமைச்சர் அன்பில் மகேஸ் பொய்யாமொழி பேசியது : நான் கடந்தமுறை சட்டப் பேரவை உறுப்பினராக இருந்தபோதே இந்த பிரச்னைக்கு தீர்வு காண வேண்டும் என வலியுறுத்தி பேரவையில் பல முறை பேசியுள்ளேன். இதுதொடர்பாக மத்திய அமைச்சரையும் சென்று சந்தித்து வந்தேன். இந்த பிரச்னைக்குத் தீர்வு காணத்தான் இந்த கூட்டம். எனவே, விரைவில் தீர்வு காணப்படும் என்றார்.

ஆட்சியர் மா. பிரதீப்குமார் பேசியது : அணுகுசாலைக்கு தேவையான நிலம் எடுப்பது தொடர்பாக 2013– ஆம் ஆண்டு அரசாணை வெளியிடப்பட்டுள்ளது. அதற்கு ரூ.89 கோடி ஒதுக்கீடு செய்யப்பட்டது. ஆனால் தற்போது அவற்றுக்கான செலவுத் தொகை அதிகரிக்க வாய்ப்புள்ளது. தனியார் நிலங்கள் மட்டும் ஏறத்தாழ 96,679 சதுர அடி தேவைப்படுகிறது. மொத்தமாக நிலம் கையகப்படுத்த, இழப்பீடாக வழங்க மட்டுமே ரூ.578 கோடி தேவைப்படுகிறது என்றார்.

திருச்சி ஆட்சியரகத்தில் செவ்வாய்க்கிழமை நடைபெற்ற அரியமங்கலம் முதல் துவாக்குடி வரையிலான அணுகுசாலை குறித்த ஆலோசனைக் கூட்டத்தில் பேசிய நகராட்சி நிர்வாகத் துறை அமைச்சர் கே.என். நேரு. உடன் பள்ளிக்கல்வித் துறை அமைச்சர் அன்பில் மகேஸ் பொய்யாமொழி, ஆட்சியர் மா. பிரதீப்குமார், மாநகராட்சி மேயர் மு. அன்பழகன், ஆணையர் இரா. வைத்திநாதன் உள்ளிட்டோர்.

2 மாதங்களில் நிலம் கையகப்படுத்த வலியுறுத்தல் : கூட்டத்தில், அணுகுசாலை மீட்பு கூட்டமைப்பின் ஒருங்கிணைப்பாளர்கள் எஸ். சுப்பிரமணியன், எஸ். சக்திவேல், ஏ. நடராஜன் ஆகியோர் பேசியது : நீதிமன்றம் அளித்த தீர்ப்பின் அடிப்படையில் தேசிய நெடுஞ்சாலையில் அணுகு சாலை அமைக்க வேண்டும். அடுத்த இருமாதங்களுக்குள் அதற்கான நிலம் கையகப்படுத்தும் பணிகளை தொடங்க வேண்டும். இழப்பீட்டு தொகையை முடிவு செய்து, தொடர்புடைய பணிகளுக்கான முடக்கப்பட்ட கோப்புகளை அலுவலர்கள் விடுவிக்க வேண்டும் என்றனர். இதே கோரிக்கையை கூட்டத்தில் பங்கேற்ற பல்வேறு நலச் சங்கங்களின் நிர்வாகிகளும் வலியுறுத்தினர்.

நிகழ்வில், மாநகராட்சி மேயர் மு. அன்பழகன், ஆணையர் இரா. வைத்திநாதன், மாநகர காவல் ஆணையர் காமினி, மாவட்டக் காவல் கண்காணிப்பாளர் சுஜித்குமார், தேசிய நெடுஞ்சாலை அதிகார திட்டக் குழும மண்டல அலுவலர் அஜய் பிஸ்னாய், பல்வேறு நலச்சங்க நிர்வாகிகள், அமைப்பு நிர்வாகிகள், அரசு அலுவலர்கள் பலரும் பங்கேற்றனர்.

இருசக்கர வாகனம் மீது சரக்கு லாரி மோதியதில் இளம்பெண் உயிரிழப்பு

மணப்பாறை, ஆக. 8: திருச்சி மாவட்டம் மணப்பாறை அருகே செவ்வாய்க்கிழமை இருசக்கர வாகனம் மீது சரக்கு லாரி மோதியதில் இளம்பெண் உயிரிழந்தார்.

ஹேன்ஷினி பிரியா

மணப்பாறையை அடுத்த பொத்தமேட்டுப்பட்டி சர்ச் தெருவைச் சேர்ந்த அ.ராயப்பன் மனைவி சாந்தா மார்க்ரெட் மேரி(40). இவர், செவ்வாய்க்கிழமை இரவு தனது மகள் ஹேன்ஷினி பிரியா(17)வுடன் இருசக்கர வாகனத்தில் திருச்சி - திண்டுக்கல் தேசிய நெடுஞ்சாலையில் நொச்சிமேடு அருகே சென்று கொண்டிருந்தார். அப்போது, பின்னால் வந்த சரக்கு லாரி இருசக்கர வாகனம் மீது மோதியது. இதில், ஹேன்ஷினி பிரியா நிகழ்விடத்திலேயே உயிரிழந்தார். சாந்தா மார்க்ரெட்மேரி காயமடைந்தார்.

இதுகுறித்து மணப்பாறை போலீஸார் வழக்குப் பதிந்து லாரி ஓட்டுநர் திண்டுக்கல் மாவட்டம், வே.கருப்பண்ணசாமி(26)யை கைது செய்து விசாரித்து வருகின்றனர். உயிரிழந்த ஹேன்ஷினி பிரியா சத்திரப்பட்டியில் உள்ள தனியார் செவிலியர் கல்லூரியில் படித்து வந்தார்.

இன்றைய நிகழ்ச்சிகள்

பிஷப் ஹீபர் கல்லூரி: மேலாண்மைத் துறை, மகளிர் அதிகாரமளித்தல் மற்றும் மக்கள் மேலாண்மை என்ற தலைப்பிலான கருத்தரங்கம், பங்கேற்பு – புதுவை போக்குவரத்துத்துறை அமைச்சர் சந்திர பிரியங்கா, கல்லூரி வளாகம், முற்பகல் 11.

ஜோசப் கண் மருத்துவமனை: குழந்தைகளுக்கு எதிரான குற்ற விழிப்புணர்வு பேரணி, பங்கேற்பு – ஆட்சியர் மா. பிரதீப் குமார், ஆட்சியர் அலுவலக குழந்தைகள் போக்குவரத்து பூங்கா, காலை 9.

ஸ்ரீமதி இந்திராகாந்தி கல்லூரி: பயிற்சி மற்றும் வேலைவாய்ப்புப் பிரிவு, ஆளுமைத் திறன் மேம்பாடு என்ற தலைப்பிலான நிகழ்ச்சி, பங்கேற்பு – ஹலோ எப்எம் உதவி நிகழ்ச்சி மேலாளர் அருணா, கல்லூரி வளாகம், காலை 10.

திருச்சிராப்பள்ளித் தமிழ்ச் சங்கம்: ஆகஸ்ட் திங்கள் நிகழ்ச்சி, இசையால் இணைவோம் என்ற தலைப்பில் உரை – சண்முக. செல்வகணபதி, சங்க வளாகம், மேலரண் சாலை, மாலை 6.30.

லால்குடி

ஸ்ரீமதி இந்திராகாந்தி கல்லூரி: இயற்பியல் துறை, நவீன தொழில்நுட்பத்தில் இயற்பியலின் பங்கு என்ற தலைப்பிலான நிகழ்ச்சி, எல்.என்.பி. மகளிர் மேல்நிலைப் பள்ளி, லால்குடி, காலை 10.

கோயில் யானைப் பாகன் தற்கொலை

திருச்சி, ஆக. 8: மலைக்கோட்டை கோயில் யானை உதவி பாகன் தூக்கிட்டு தற்கொலை செய்து கொண்டார்.

திருச்சி கருமண்டபம் அசோக் நகரைச் சேர்ந்தவர் விக்னேஷ் (32). மலைக்கோட்டை கோயில் யானை உதவி பாகனாக வேலை செய்து வந்தார். திருமணமாகாத இவர் கருமண்டபத்தில் உள்ள உறவினர் வீட்டில் தங்கி, தினமும் பணிக்குச் சென்று வந்துள்ளார்.

உடல்நலக்குறைவால் அவதிப்பட்டு இவர், சில நாள்களாக மனஉளைச்சலில் இருந்து வந்துள்ளார். செவ்வாய்க்கிழமை வீட்டில் யாருமில்லாத நேரத்தில் தூக்கிட்டு தற்கொலை செய்து கொண்டார். இது குறித்து கண்டோன்மென்ட் போலீஸார் வழக்குப் பதிந்து விசாரிக்கின்றனர்.

தமிழ்நாடு அரசு - நெடுஞ்சாலைத்துறை
நபார்டு மற்றும் கிராமச் சாலைகள் வட்டம், செங்கல்பட்டு
ஒப்பந்தப்புள்ளி அறிவிப்பு

ஒப்பந்தப்புள்ளி அறிவிப்பு எண். 20 / 2023-2024/ முவதொஅ / நாள் : 07.08.2023

தமிழ்நாடு ஆளுநருக்காகவும் அவர்களின் சார்பாகவும் கண்காணிப்புப் பொறியாளர்(நெ) நபார்டு மற்றும் கிராமச் சாலைகள், செங்கல்பட்டு வட்டம், அவர்களால் நபார்டு **ஆர்.ஐ.டி.எப்.XXVIII- 158 பாலங்கள் 2022-2023-ன் கீழ் கடலூர்(நெ) நபார்டு மற்றும் கிராமச் சாலைகள் கோட்டத்திற்கான ஒரு பாலப்பணிக்கு இணையவழியில் மட்டுமே சதவீத** ஒப்பந்தப்புள்ளிகள் **30.08.2023, 15.00** மணி வரை வரவேற்கப்படுகிறது.

பணியின் விவரம், தோராய மதிப்பு, முன்வைப்பு தொகை, ஒப்பந்தப்புள்ளி ஆவணங்கள் மற்றும் அனைத்து இதர விபரங்களை **https://tntenders.gov.in** என்ற அரசு இணையதளத்தில் **11.08.2023** முதல் தெரிந்துகொள்ளலாம். ஏதேனும் திருத்தங்கள் / மாறுதல்கள் இருப்பின் மேற்குறிப்பிட்ட அரசு இணையதளத்தில் மட்டுமே வெளியிடப்படும் என்று தெரிவிக்கப்படுகிறது.

செ.ம.தொ.இ./ 4351 /ஒப்பந்தப்புள்ளி/2023

கண்காணிப்புப்பொறியாளர் (நெ),
நபார்டு மற்றும் கிராமச்சாலைகள் வட்டம், செங்கல்பட்டு-1.

மாநகராட்சி குப்பை வண்டிகளில் பேட்டரிகள் திருட்டு

திருச்சி, ஆக. 8: திருச்சி, கண்டோன்மென்ட் ,பாரதிதாசன் சாலையில் மாநகராட்சி மைய அலுவலகத்தைச் சுற்றியுள்ள பகுதிகளில் குப்பைகள் சேகரிக்கும் பணியில் ஈடுபடுத்தப்படும் சிறிய ரக வாகனங்கள் இரவு நேரத்தில் அலுவலக வளாகத்தின் பின்புறம் நிறுத்தி வைப்பது வழக்கம். இதன்படி, திங்கள்கிழமை இரவு வாகனங்கள் நிறுத்தி வைக்கப்பட்டிருந்தன.

செவ்வாய்க்கிழமை காலை, வாகன ஓட்டுநர்கள் வாகனத்தை எடுக்க வந்தபோது, 7 வாகனங்களில் இருந்த பேட்டரிகளை மர்ம நபர்கள் திருடிச் சென்றது தெரிய வந்தது. இதில், 3 வாகனங்கள் தொடர்ந்து பணியில் ஈடுபட்டிருக்கும் வாகனங்கள், 4 வாகனங்கள் மாற்று வாகனங்களாகும்.

புகாரின்பேரில், கண்டோன்மென்ட் போலீஸார் வழக்குப் பதிந்து சிசிடிவி கேமரா பதிவுகளை வைத்து விசாரித்து வருகின்றனர்.